ஆட்சித்தமிழ் ஐ.ஏ.எஸ் அகாடெமி

RAGS/2022

Question Booklet No: 8

பதிவு எண் | | | | | | | | | | |

2022

# பொதுத் தமிழும் பொது அறிவும்
# (மாதிரி வினாத்தாள் - 8)

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு: 200 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. பகுதி - அ வில் குறைந்தபட்ச மதிப்பெண் (40% அதாவது 60 மதிப்பெண்) பெறாத தேர்வர்களின் பகுதி - ஆ விற்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது. பகுதி - அ வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களின் பகுதி ஆ-வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மட்டும் தரவரிசை பட்டியலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
4. விடையளிக்கத் தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
5. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
6. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
7. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
8. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
9. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
10. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
11. குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
12. கேள்வி வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி - ஆ) ஆங்கில வடிவே இறுதியானது.
13. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SPACE FOR ROUGH WORK

1. மலர்க்கை - இலக்கணக் குறிப்பு தருக:
(A) உம்மைத்தொகை
(B) பண்புத்தொகை
(C) உவமைத்தொகை
(D) வினைமுற்று
(E) விடை தெரியவில்லை

2. முத்துடைத்தாமம் - இலக்கண குறிப்பு தருக:
(A) நான்காம் வேற்றுமை
(B) இரண்டாம் வேற்றுமைத் தொகை
(C) ஆறாம் வேற்றுமை
(D) உவம உருபு
(E) விடை தெரியவில்லை

3. ஓர் - இலக்கணக் குறிப்பு தருக:
(A) பெயரெச்ச விகுதி
(B) பலர்ப்பால் வினைமுற்று விகுதி
(C) இறந்தகால இடைநிலை
(D) ஆகுபெயர்
(E) விடை தெரியவில்லை

4. வற்றல் தின்றான் - இலக்கண குறிப்பு தருக:
(A) கருவியாகுபெயர்
(B) தொழிலாகுபெயர்
(C) பண்பாகுபெயர்
(D) இடவாகுபெயர்
(E) விடை தெரியவில்லை

5. பொருத்துக:
(a) நேர் நேர் நிரை - கருவிளங்காய்
(b) நிரை நிரை நேர் - கூவிளம்
(c) நேர் நிரை - தேமாங்காய்
(d) நிரை நிரை - தேமாங்கனி
(e) நேர் நேர் நேர் - கருவிளம்

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 5 | 1 | 4 |
| (B) | 1 | 4 | 2 | 3 | 5 |
| (C) | 5 | 1 | 3 | 4 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 5 | 3 |

(E) விடை தெரியவில்லை

6. நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் ........
(A) மெய்முதல் புணர்ச்சி
(B) உயிர்முதல் புணர்ச்சி
(C) மெய்யீற்றுப் புணர்ச்சி
(D) உயிரீற்றுப் புணர்ச்சி
(E) விடை தெரியவில்லை

7. நிலைமொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றம் நிகழ்ந்தால் __________

(A) உயிரீற்றுப் புணர்ச்சி
(B) மெய் முதல் புணர்ச்சி
(C) விகாரப் புணர்ச்சி
(D) இயல்புப் புணர்ச்சி
(E) விடை தெரியவில்லை

8. பொருத்துக

(a) மட்பாண்டம் — 1. தோன்றல் விகாரம்
(b) மரவேர் — 2. இயல்புப் புணர்ச்சி
(c) மணிமுடி — 3. கெடுதல் விகாரம்
(d) கடைத்தெரு — 4. திரிதல் விகாரம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

9. தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

(A) அந்த இந்த என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்
(B) எந்த என்னும் வினாத்திரிபை அடுத்து வல்லினம் மிகும்
(C) உவமைத்தொகையில் வல்லினம் மிகும்
(D) உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்
(E) விடை தெரியவில்லை

10. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

(A) இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வரும் இடங்களில் வல்லினம் மிகாது
(B) நான்காம் வேற்றுமை உருபாகிய ‘கு’ வெளிப்படையாக வரும் இடத்தில் வல்லினம் மிகாது
(C) உவமைத் தொகையில் வல்லினம் மிகாது
(D) எந்த என்னும் வினாத்திரிபை அடுத்து வல்லினம் மிகாது
(E) விடை தெரியவில்லை

11. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி?

(A) உருவக அணி
(B) தீவிக அணி
(C) உவமை அணி
(D) எடுத்துக்காட்டு உவமை அணி
(E) விடை தெரியவில்லை

12. வலியில் நிலைமையான் வல்லுருவம் <u>பெற்றம்</u>
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று - இக்குறட்பாவில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

(A) பசு
(B) எருமை
(C) சிங்கம்
(D) மான்

(E) விடை தெரியவில்லை

13. செயலையோ, காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் ________ எனப்படும்.

(A) தெரிநிலை வினையெச்சம் (B) முற்றெச்சம்
(C) குறிப்புப் பெயரெச்சம் (D) குறிப்பு வினையெச்சம்
(E) விடை தெரியவில்லை

14. 'வள்ளி படித்தனள் மகிழ்ந்தனள்' என்பது எவ்வகை எச்சம்?

(A) பெயரெச்சம் (B) வினையெச்சம்
(C) முற்றெச்சம் (D) குறிப்பு பெயரெச்சம்
(E) விடை தெரியவில்லை

15. பொருத்துக:

(A) Free verse - 1. பண்பாட்டுக் கழகம்
(B) Simile - 2. உருவக அணி
(C) Metaphor - 3. உவமையணி
(D) Cultural Academy - 4. கட்டிலாக் கவிதை.

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

16. பொருத்துக:

(a) தாள் -1. குத்துச்செடி, புதர்
(b) தண்டு -2. நெட்டி, மிளகாய்ச் செடி
(c) கோல் -3. நெல், கேழ்வரகு
(d) தூறு -4. கீரை, வாழை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

17. பொருத்துக:

(a) தாள் - 1. காய்ந்த இலை
(b) தோகை - 2. சோளம், கரும்பு
(c) சண்டு - 3. நெல், புல்

(d) சருகு - 4. காய்ந்த தாளும் தோகையும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

18. தேம்பாவணியில் எத்தனை படலங்கள் உள்ளன?
(A) 30
(B) 12
(C) 36
(D) 64
(E) விடை தெரியவில்லை

19. 'கான்சுடான்சு சோசப் பெசுகி' எனும் இயற்பெயர் கொண்டவர் யார்?
(A) ஜி.யு.போப்
(B) ஜேம்ஸ் பிராங்கா
(C) கால்டுவெல்
(D) வீரமாமுனிவர்
(E) விடை தெரியவில்லை

20. 'பரமார்த்தக் குருகதைகள்' என்ற நூலின் ஆசிரியர்?
(A) வீரமாமுனிவர்
(B) ஜி.யு.போப்
(C) ஆறுமுக நாவலர்
(D) மஸ்தான் சாகிபு
(E) விடை தெரியவில்லை

21. 'ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
அரசு பட அமர் உழக்கி' இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
(A) சிலப்பதிகாரம்
(B) புறநானூறு
(C) மதுரைக்காஞ்சி
(D) பட்டினப்பாலை
(E) விடை தெரியவில்லை

22. 'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட' இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
(A) சீவகசிந்தாமணி
(B) சிலப்பதிகாரம்
(C) மணிமேகலை
(D) பெரியபுராணம்
(E) விடை தெரியவில்லை

23. 'சிலம்பின் சிறுநகை' என்ற நூலின் ஆசிரியர் யார்?
(A) சாலை இளந்திரையன்
(B) பாரதியார்
(C) பாரதிதாசன்
(D) புலவர் குழந்தை
(E) விடை தெரியவில்லை

24. 'மருமக்கள்வழி மான்மியம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) வீரமாமுனிவர்
(B) கவிமணி
(C) சீகன் பால்கு ஐயர்
(D) சுத்தானந்த பாரதி
(E) விடை தெரியவில்லை

25. தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடுதல் தீமையே என்பதை எடுத்துரைக்கும் நூல்

(A) குண்டலகேசி
(B) பெருங்கதை
(C) நீலகேசி
(D) சூளாமணி
(E) விடை தெரியவில்லை

26. இன்மை யிளிவா முடைமை யுயிர்க்கச்சம்
மன்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப்
புன்மை யுறுக்கும் புரையில் பொருளை ...... என எந்த நிலையிலும்
மாந்தர்கள் கீழ்மையைத் தருகிற பொய்ப்பொருளைப் பற்றாது சான்றோர்
மொழிந்த துறவொழுக்கத்தைப் பின்பற்றுவதே சிறப்புடையது என்ற பொருள் அமைந்த பாடல் இடம்பெறும் நூல் எது?

(A) சிலப்பதிகாரம்
(B) குண்டலகேசி
(C) வளையாபதி
(D) பெருங்கதை
(E) விடை தெரியவில்லை

27. ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும்........ காப்பியமாகும்.

(A) சைவ
(B) வைணவ
(C) சமணம்
(D) பௌத்தம்
(E) விடை தெரியவில்லை

28. வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடுப்படும் இலக்கியம் எது?

(A) தூது இலக்கியம்
(B) வாயில் இலக்கியம்
(C) கொடை இலக்கியம்
(D) ஆற்றுப்படை இலக்கியம்
(E) விடை தெரியவில்லை

29. பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியவர் யார்?

(A) நக்கீரர்
(B) கடியலூர் உருத்திரங்கண்ணனார்
(C) முடத்தாமக்கண்ணியார்
(D) நல்லூர் நத்தத்தனார்
(E) விடை தெரியவில்லை

30. 'வானம் ஊன்றிய மதலை போல ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி" என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) பெரும்பாணாற்றுப்படை
(B) பட்டினப்பாலை

(C) புறநானூறு (D) சிறுபாணாற்றுப்படை
(E) விடை தெரியவில்லை

31. நெடுந்தொகை என அழைக்கப்படும் நூல் எது?
(A) புறநானூறு (B) அகநானூறு
(C) குறுந்தொகை (D) கலித்தொகை
(E) விடை தெரியவில்லை

32. மதுரைக்காஞ்சியைப் பாடியவர் யார்?
(A) நப்பூதனார் (B) கடியலூர் உருத்திரங்கண்ணனார்
(C) மாங்குடி மருதனார் (D) நக்கீரனார்
(E) விடை தெரியவில்லை

33. தாராசுரம் ஐராவதீசுவர் கோவிலை கட்டியவர் யார்?
(A) முதலாம் இராசராசன் (B) முதலாம் இராசேந்திரன்
(C) இரண்டாம் குலோத்துங்கச் சோழன் (D) இரண்டாம் இராசராசன்
(E) விடை தெரியவில்லை

34. திரிபுவன வீரேசுவரம் கோவிலை அமைத்தவர் யார்?
(A) மூன்றாம் குலோத்துங்கச் சோழன் (B) முதலாம் இராசராசன்
(C) இரண்டாம் இராசராசன் (D) முதலாம் இராசேந்திரன்
(E) விடை தெரியவில்லை

35. 'ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசோன் அலங்கல்அணிந் தருளே.' என்று பாடியவர் யார்?
(A) வள்ளலார் (B) ஆண்டாள்
(C) குலசேகராழ்வார் (D) பொய்கையாழ்வார்
(E) விடை தெரியவில்லை

36. "ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம்" என்ற கூற்றுடன் தொடர்புடையவர் யார்?
(A) புதுமைப்பித்தன் (B) அசோகமித்ரன்
(C) கல்கி (D) அண்ணாதுரை
(E) விடை தெரியவில்லை

37. 'சிறுகதை மன்னன்' என்று அழைக்கப்படுபவர் யார்?
(A) வ.வே.சு (B) வீரமாமுனிவர்
(C) ஜெயகாந்தன் (D) கல்கி
(E) விடை தெரியவில்லை

38. “எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் ஏழை
கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்” என்று பாடியவர் யார்?

(A) கண்ணதாசன்
(B) பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்
(C) மருதகாசி
(D) ஜெயகாந்தன்
(E) விடை தெரியவில்லை

39. “எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்” என்ற பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) தொல்காப்பியம்
(B) நன்னூல்
(C) தண்டியலங்காரம்
(D) வீரசோழியம்
(E) விடை தெரியவில்லை

40. மனித சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி, அஃது எவ்வாறு வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து எழுதப்பட்ட நூல் எது?

(A) புறநானூறு
(B) தொல்காப்பியம்
(C) திருக்குறள்
(D) ஆத்திசூடி
(E) விடை தெரியவில்லை

41. புலிசேர்ந்து போகிய கல்அளை போல ஈன்ற வயிறோ இதுவே என்ற பாடல் வரி இடம் பெற்றுள்ள நூல் எது?

(A) திருக்குறள்
(B) புறநானூறு
(C) அகநானூறு
(D) பரிபாடல்
(E) விடை தெரியவில்லை

42. “பள்ளித் தலமனைத்தும் கோயில்செய்குவோம்; எங்கள் பாரததேசமென்று தோள்கொட்டுவோம்” என்று பாடியவர் யார்?

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) வாணிதாசன்
(D) முடியரசன்
(E) விடை தெரியவில்லை

43. ‘முண்டி மோதும் துணிவே இன்பம்
உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி’ என்ற பாடல் அடிகளை பாடியவர் யார்?

(A) சுரதா
(B) மு. மேத்தா
(C) கல்யாண்ஜி
(D) ந. பிச்சமூர்த்தி
(E) விடை தெரியவில்லை

44. “புதுக்கவிதையின் தந்தை” என்று போற்றப்படுபவர்?

(A) பாரதியார்
(B) ந. பிச்சமூர்த்தி
(C) வல்லிக்கண்ணன்
(D) சுரதா
(E) விடை தெரியவில்லை

45. “இயற்கையையும் வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்து, அறிவுத் தெளிவுடன் நல்வாழ்க்கைக்கான தத்துவ உண்மைகளைக் காணும் முயற்சிகளே பிச்சமூர்த்தியின் கவிதைகள்” என்று கூறியவர் யார்?

(A) வல்லிக்கண்ணன் (B) கல்யாண்ஜி

(C) மு. மேத்தா (D) சி.சு. செல்லப்பா

(E) விடை தெரியவில்லை

46. பாரதியாரின் வசன கவிதையைத் தொடர்ந்து புதுக்கவிதை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் யார்?

(A) பாரதிதாசன் (B) ந. காமராசன்

(C) ந. பிச்சமூர்த்தி (D) சுரதா

(E) விடை தெரியவில்லை

47. புதுக்கவிதை மறுமலர்ச்சியும் வலிமையும் பெற்றதில் எழுத்து இதழின் பங்கு குறிப்படத்தக்கதாகும். இந்த இதழைத் தொடங்கியவர் யார்?

(A) ந.பிச்சமூர்த்தி (B) மௌனி

(C) க.நா.சுப்பிரமணியன் (D) சி.சு.செல்லப்பா

(E) விடை தெரியவில்லை

48. பெட்டிக்கடை நாரயணன், ‘விஞ்ஞானி’ போன்ற கவிதைகளை எழுதியவர்.........

(A) சி.மணி (B) சுந்தரராமசாமி

(C) பிரமிள் (D) ந.பிச்சமூர்த்தி

(E) விடை தெரியவில்லை

49. ஏடுகளில்
முன்பக்கத்தில்
அட்டையில்
வீடுகளில்
பின்பக்கத்தில்
அடுப்பங்கரையில் .... என்ற கவிதையின் ஆசிரியர் யார்?

(A) காசி ஆனந்தன் (B) இளம்பிறை

(C) சல்மா (D) கந்தர்வன்

(E) விடை தெரியவில்லை

50. தனிவாக்கியம் குறித்து கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

(A) வினாப் பொருள் தரும் வாக்கியம்

(B) ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடியும்

(C) தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வரும்

(D) ஒரு முதன்மை வாக்கியம் ஒரு துணை வாக்கியத்துடன் சேர்ந்து வரும்

(E) விடை தெரியவில்லை

51. கீழ்க்காண்பவர்களுள் எவர் திருக்குறளுக்கு உரை எழுதவில்லை

(A) நச்சர் (B) திருமலையர்

(C) அடியார்க்கு நல்லார் (D) தாமத்தர்
(E) விடை தெரியவில்லை

52. உமர்கய்யாம், 'ரூபாயத்' என்ற பெயரில் எழுதிய நூலைக் கவிமணி மொழி பெயர்த்தார். அடிக்கோடிட்ட சொல்லின் பொருளை எழுதுக.
(A) எட்டடிச் செய்யுள் (B) இரண்டடிச் செய்யுள்
(C) நான்கடிச் செய்யுள் (D) இவை எல்லாம் தவறானவை
(E) விடை தெரியவில்லை

53. முதலெழுத்து எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவது
(A) முதலில் உள்ள எழுத்து (B) உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்த்து முப்பதும்
(C) மெய்யெழுத்தும் சார்பெழுத்தும் (D) இவை எவற்றையும் குறிக்காது
(E) விடை தெரியவில்லை

54. துளு மொழிக்கு இலக்கணம் எழுதியவர் யார்?
(A) மாமன்னர். A (B) A.C. பர்னல்
(C) R.A. கோல் (D) J. பிரிகல்
(E) விடை தெரியவில்லை

55. பெருங்கற் புதை குழிகள் கீழ்க்காணும் வடிவங்களில் அமைக்கப்பட்டிருந்தன
1. குழிவட்டங்கள் 2. குகைவட்டங்கள்
3. சதுரம் 4. செவ்வகம்
(A) 4 மட்டும் சரி (B) 3 மட்டும் சரி
(C) 1, 2 சரி (D) 3, 4 சரி
(E) விடை தெரியவில்லை

56. வினைச் சொல்லுக்கான வரையறைகளுள் எது பொருத்தமானது?
1. வேற்றமை கொள்ளும் 2. காலம் காட்டும்
3. வேற்றுமை கொள்ளாது 4. காலம் காட்டாது
(A) 1, 4 சரி 2, 3 சரி அல்ல (B) 2, 3 சரி 1, 4 சரி அல்ல
(C) 1, 2 சரி 3, 4 சரி அல்ல (D) 3, 4 சரி 1, 2 சரி அல்ல
(E) விடை தெரியவில்லை

57. பின்வரும் பாடலடிகளுக்குரிய நூல்களுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது?
(A) நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் - நற்றிணை
(B) வினையே ஆடவர்க்கு உயிரே - புறநானூறு
(C) அறம்நனி சிறக்க அல்லது கெடுக - ஐங்குறுநூறு
(D) பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல் - கலித்தொகை
(E) விடை தெரியவில்லை

58. ‘கொடுமணல்’ என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர் அமைந்துள்ள மாவட்டம் எது?
(A) கோவை
(B) திருச்சி
(C) நாமக்கல்
(D) ஈரோடு
(E) விடை தெரியவில்லை

59. ஒலி - என்னும் வேர்ச்சொல்லின் வியங்கோள் வினைமுற்றை எழுதுக.
(A) ஒலிக்க
(B) ஒலித்த
(C) ஒலித்து
(D) ஒலித்தல்
(E) விடை தெரியவில்லை

60. குட்டித் திருவாசகம் எனும் அடைமொழியை கொண்ட நூல் யாது?
(A) நாலாயிர திவ்விய பிரபந்தம்
(B) நன்னூல்
(C) திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதி
(D)தேவாரம்
(E) விடை தெரியவில்லை

61 “கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை”
-இக்குறளில், கோளில் - குணமிலவே என்பது
(A) இணை மோனை
(B) பொழிப்பு மோனை
(C) ஒரூஉ மோனை
(D) கூழை மோனை
(E) விடை தெரியவில்லை

62. “முக்தி நூல்” என அடைமொழி கொண்ட நூல் யாது?
(A) மணிமேகலை
(B) சீவக சிந்தாமணி
(C) குண்டலகேசி
(D) வளையாபதி
(E) விடை தெரியவில்லை

63. “உவமைத்தொகை” இலக்கண குறிப்பிற்கு பொருந்தாத சொல்லை காண்க.
(A) கயல்விழி
(B) மலர் முகம்
(C) வெண்ணிலவு
(D) தாமரைக் கண்கள்
(E) விடை தெரியவில்லை

64. கம்பரைப் புரந்தவர் யார்?
(A) ஒட்டக்கூத்தர்
(B) சடையப்ப வள்ளல்
(C) சீதக்காதி
(D) சந்திரன் சுவர்க்கி
(E) விடை தெரியவில்லை

65. வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் எந்த நூலில் கூறினார்?
(A) இந்தியன் ஒப்பினியன்
(B) டிஸ்கவரி ஆப் இந்தியா
(C) தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம்
(D) யங் இந்தியா

(E) விடை தெரியவில்லை

66. அவன் நல்லன் எவ்வகைப்பெயர்
(A) இடப் பெயர்
(B) காலப் பெயர்
(C) குணப் பெயர்
(D) தொழில் பெயர்
(E) விடை தெரியவில்லை

67. தமிழன் என்றோர்இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு என்று பாடியவர் யார்?
(A) பாரதியார்
(B) கவிமணி
(C) சுரதா
(D) நாமக்கல் கவிஞர்
(E) விடை தெரியவில்லை

68. கூற்று 1 : 'பேனா' என்ற புனைப் பெயரில் பல நூல்களை எழுதியவர் பெ.நா. அப்புசாமி
கூற்று 2 : மதுரைப் பல்கலைக்கழகத்தில் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற பட்டத்தைப் பெற்றவர் பெ.நா. அப்புசாமி
(A) கூற்று 1 மட்டும் சரி
(B) கூற்று 2 மட்டும் சரி
(C) கூற்று இரண்டும் தவறு
(D) கூற்று இரண்டும் சரி
(E) விடை தெரியவில்லை

69. 'விளம்பி' என்பது .................. பெயர்
(A) இயற்பெயர்
(B) புனைபெயர்
(C) ஊர்ப்பெயர்
(D) இறைவனின் பெயர்
(E) விடை தெரியவில்லை

70. திருக்குறளில் எத்தனை அதிகாரம் உள்ளன
(A) 33
(B) 133
(C) 13
(D) 1330
(E) விடை தெரியவில்லை

71. 'என்னுடைய நாடு' - என்னும் பாடல் இடம் பெற்றுள்ளத் தலைப்பு
(A) சமுதாய மலர்
(B) காந்தி மலர்
(C) தேசிய மலர்
(D) இசைமலர்
(E) விடை தெரியவில்லை

72. "கல்" என்னும் வேர்ச்சொல்லின் பதம் அறிக?
(A) கற்றல்
(B) கற்பனை
(C) கண்டான்
(D) கல்லை
(E) விடை தெரியவில்லை

73. செங்கீரைப் பருவம் - பிள்ளைத்தமிழில் எந்தப் பருவமாக விளங்குகிறது?
(A) இரண்டாம் பருவம்
(B) ஐந்தாம் பருவம்
(C) முதற் பருவம்
(D) மூன்றாம் பருவம்
(E) விடை தெரியவில்லை

74. 'சட்டம் ஒரு இருட்டறை - அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு' - என்று கூறியவர்
(A) அண்ணா
(B) காந்தி
(C) அம்பேத்கர்
(D) மு. வரதராசனார்
(E) விடை தெரியவில்லை

75. 'விசும்பு' என்னும் சொல்லின் பொருள்
(A) ஆகாயம்
(B) துளி
(C) மழைத்துளி
(D) மேகம்
(E) விடை தெரியவில்லை

76. தமிழக அரசின் பரிசு பெற்ற முடியரசனின் காவியம் எது ?
(A) சகலகலா வல்லி மாலை
(B) பூங்கொடி
(C) மணிக்கொடி
(D) உரிமை வேட்கை
(E) விடை தெரியவில்லை

77. 'காந்தியடிகளை அரை நிருவாணப் பக்கிரி' என்று ஏளனம் செய்தவர்
(A) சர்ச்சில்
(B) புனித ஜார்ஜ்
(C) வாரன் ஹேஸ்டிங்ஸ்
(D) இராபர்ட் கிளைவ்
(E) விடை தெரியவில்லை

78. பொருளறிந்து பொருத்துக

| | |
|---|---|
| (A) ஒல்லை | 1. சிவன் |
| (B) ஈறு | 2. எருமை |
| (C) மேதி | 3. எல்லை |
| (D) அங்கணர் | 4. விரைவு |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

79. திவ்வியப் பிரபந்தத்திற்கு உரை வழங்கியவர்
(A) அடியார்க்கு நல்லார்
(B) அரும்பத உரைகாரர்
(C) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
(D) பெரியவாச்சான் பிள்ளை
(E) விடை தெரியவில்லை

80. ‘ஜீவனாம்சம்,’ என்ற நூலை எழுதியவர் யார்?

(A) ஜெயகாந்தன்
(B) புதுமைப்பித்தன்
(C) அழ. வள்ளியப்பா
(D) சி.சு. செல்லப்பா
(E) விடை தெரியவில்லை

81. கூகை - உரிய மரபுச்சொல்லை எழுது.

(A) கூவும்
(B) கத்தும்
(C) குழறும்
(D)அகவும்
(E) விடை தெரியவில்லை

82. ‘ஆபுத்திரன் நாடு அடைந்த காதை’ மணிமேகலையில் ...................... காதையாக உள்ளன.

(A) இருபதாவது
(B) இருபத்து நான்காவது
(C) இருபத்தேழாவது
(D) இருபத்தொன்றாவது
(E) விடை தெரியவில்லை

83. ‘வீரமாமுனிவரைப் போல் எழுத்துச் சீர்திருத்தம் செய்தவர்’

(A) பண்டிதமணி கதிரேசன் செட்டியார்
(B) பாண்டித்துரைத் தேவர்
(C) அயோத்திதாச பண்டிதர்
(D) பேரறிஞர் அண்ணா
(E) விடை தெரியவில்லை

84. வினைத்தொகை

1. சென்னிழல்
2. செந்நிழல்
3. சூழ் கடல்
4. உகுநீர்

(A) 1, 2, 3, 4 - சரியானவை
(B) 1, 3, 4 - சரி, 2 - தவறு
(C) 1, 2 - தவறு, 3, 4 - சரி
(D) 2, 3, 4 - சரி 1 - தவறு
(E) விடை தெரியவில்லை

85. இவர்களுள் ஒருவர் இலங்கையில் பிறந்த தமிழ்க்கவிஞர்

(A) தருமு சிவராமு
(B) சி.மணி
(C) பசுவய்யா
(D) தேவதேவன்
(E) விடை தெரியவில்லை

86 இந்தியாவின் ‘பெப்பிசு’ என அழைக்கப்படுபவர்

(A) அறிஞர் அண்ணா
(B) ஜவகர்லால் நேரு
(C) மு.வரதராசனார்
(D) ஆனந்தரங்கர்
(E) விடை தெரியவில்லை

87. பெயர்ச்சொல்லின் வகையறிக : “இகலவர்”

(A) வினையாலணையும் பெயர்
(B) குறிப்பு வினையாலணையும் பெயர்
(C) காரணச் சிறப்புப் பெயர்
(D) உவமையாகு பெயர்

(E) விடை தெரியவில்லை

88. மலையமான் என்ற மன்னன் மக்களை யானையின் கால் கீழிட்டுக் கொல்ல முற்பட்டபொழுது, தடுத்து நிறுத்திய புலவர்

(A) கபிலர்
(B) கோவூர்க்கிழார்
(C) மோசிகீரனார்
(D) ஔவையார்
(E) விடை தெரியவில்லை

89. தேவநேயப் பாவாணர் தமிழன்னைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இறுதியாக சொற்பொழிவு நிகழ்த்திய இடம் எது?

(A) சென்னை
(B) மதுரை
(C) கோவை
(D) தஞ்சை
(E) விடை தெரியவில்லை

90. இலக்கணக் குறிப்புத் தருக.
சித்திரைத் திங்கள்

(A) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
(B) பண்புத் தொகை
(C) வினைத் தொகை
(D) வேற்றுமைத் தொகை
(E) விடை தெரியவில்லை

91. சேக்கிழாரை "பக்திச் சுவை நனிசொட்டச் சொட்ட பாடிய கவிவலவ" எனப் புகழ்ந்துரைத்தவர்

(A) மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார்
(B) கவிஞர். வெ. இராமலிங்கனார்
(C) பெ. சுந்தரனார்
(D) நா.மு.வேங்கடசாமி நாட்டார்
(E) விடை தெரியவில்லை

92. தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரம் என்று பாராட்டியவர்

(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) சுரதா
(D) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
(E) விடை தெரியவில்லை

93. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

(A) அரியவற்றுள் அரிதே, பெரியாரை எல்லாம்
(B) அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரை
(C) அரியவற்றுள் எல்லாம், பெரியாரை அரிதே
(D) பெரியாரை எல்லாம், அரியவற்றுள் அரிதே
(E) விடை தெரியவில்லை

94. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் திருநாவுக்கரசர் பாடியது

(A) நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள்
(B) ஐந்து, ஆறு, ஏழு திருமுறைகள்
(C) முதல், ஆறு திருமுறைகள்
(D) ஒன்று, இரண்டு, மூன்று திருமுறைகள்
(E) விடை தெரியவில்லை

95. “பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது” என உறுதியாக எடுத்துரைத்தவர் யார்?

(A) அறிஞர் அண்ணா
(B) பெரியார்
(C) அம்பேத்கர்
(D) காமராசர்
(E) விடை தெரியவில்லை

96. யாப்பு என்றால் --------- என்பது பொருள்.

(A) அடித்தல்
(B) சிதைத்தல்
(C) கட்டுதல்
(D) துவைத்தல்
(E) விடை தெரியவில்லை

97. தாயுமானவர் நினைவு இல்லம் எந்த மாவட்டத்தில் உள்ளது?

(A) தஞ்சாவூர்
(B) நாகப்பட்டினம்
(C) இராமநாதபுரம்
(D) புதுக்கோட்டை
(E) விடை தெரியவில்லை

98. ‘ஆனந்தத்தேன்’ நூலின் ஆசிரியர்

(A) வைரமுத்து
(B) தமிழன்பன்
(C) புதுமைப் பித்தன்
(D) க. சச்சிதானந்தன்
(E) விடை தெரியவில்லை

99. பொருத்துக :

(A) சிங்கம் 1. அகவும்
(B) மயில் 2. கனைக்கும்
(C) புலி 3. முழங்கும்
(D) குதிரை 4. உறுமும்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

100. ‘தமிழ் நாடகத் தந்தை’ எனப் போற்றப்படுபவர் யார்?

(A) பம்மல் சம்பந்தனார்
(B) சங்கரதாசு சுவாமிகள்
(C) பரிதிமாற் கலைஞர்
(D) தி.க.சண்முகனார்
(E) விடை தெரியவில்லை

101. எந்த சுவாசித்தல் நிகழ்ச்சியை ஆம்ஃபிபோலிக் சுழற்சி எனவும் அழைக்கப்படுகிறது?

(A) கிளைக்கோலைசிஸ்
(B) கிரப்ஸ் சுழற்சி

(C) பாஸ்பரிகரணம் (D) பென்டோஸ் பாஸ்பேட் வழித்தடம்

(E) விடை தெரியவில்லை

Which one of the respiratory process is otherwise called as amphipholic cycle?

(A) Glycolysis (B) Kreb's cycle

(C) Phosphorylation (D) Pentose phosphate pathway

(E) Answer not known

102. காய்கறிகள் மற்றும் பழங்களை வெட்டி வைக்கும் போது பழுப்பு நிறமாக மாறுவதேன் ?

(A) காற்றிலுள்ள ஆக்ஸிஜன் மற்றும் பீனாலிக் சேர்மம் வினைபுரிவதால்

(B) கனிம வேதிப்பொருள்கள் உருவாவதால்

(C) உப்புக்கள் உருவாவதால்

(D) காரங்கள் உருவாவதால்

(E) விடை தெரியவில்லை

Why vegetables and fruits turn brown on cutting?

(A) Due to the reaction between phenolic compound and oxygen in air

(B) Due to the formation of inorganic compound

(C) Due to the formation of salts

(D) Due to the formation of bases

(E) Answer not known

103. டார்வின் கூற்றுப்படி இனங்கள் எதன் மூலம் தோற்றுவிக்கப்படுகின்றன?

(A) சிறியதொடர் மரபு சார்ந்த மாறுபாடு (B) சிறியதொடர் மரபு அல்லாத மாறுபாடு

(C) திடீர் மரபு சார்ந்த மாறுபாடு (D) திடீர் தொடர்ச்சியற்ற மாறுபாடு

(E) விடை தெரியவில்லை

According to Darwin, speciation is effected by

(A) small continuous heritable variation (B) small continuous non heritable variation

(C) sudden heritable variation (D) sudden discontinuous variation

(E) Answer not known

104. தாவரங்களில் சுவாச நிகழ்வின் வரிசைக் கிரமமானது

(A) கிரெப் சுழற்சி, பைருவிக் அமில ஆக்ஸிஜனேற்றம். கிளைக்காலிஸிஸ், எலக்ட்ரான் கடத்தல் சங்கிலி

(B) கிளைக்காலிஸிஸ், பைருவிக் அமில ஆக்ஸிஜனேற்றம், எலக்ட்ரான் கடத்தல் சங்கிலி, கிரெப் சுழற்சி

(C) கிளைக்காலிஸிஸ், எலக்ட்ரான் கடத்தல் சங்கிலி, கிரெப் சுழற்சி , பைருவிக் அமில ஆக்ஸிஜனேற்றம்

(D) கிளைக்காலிஸிஸ், பைருவிக் அமில ஆக்ஸிஜனேற்றம் , கிரெப் சுழற்சி, எலக்ட்ரான் கடத்தல் சங்கிலி

(E) விடை தெரியவில்லை

In plants, the sequence of reactions in respiration process is

(A) Kreb's cycle, oxidation of pyruvic acid, glycolysis, electron transport chain

(B) Glycolysis, oxidation of pyruvic acid, electron transport chain , kreb's cycle

(C) Glycolysis, electron transport chain,kreb's cycle, oxidation of pyruvic acid
(D) Glycolysis, oxidation of pyruvic acid , kreb's cycle, electron transport chain
(E) Answer not known

105. டி.என்.ஏ. துண்டுகளை ஒட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நொதி.
(A) ரெஸ்டிரிக்ஷன் என்டோநியூக்லியேஸ் (B) லைப்பேஸ்
(C) லைகேஸ் (D) பெராக்ஸிடேஸ்
(E) விடை தெரியவில்லை
The enzyme that joins DNA fragments is
(A) Restriction endonuclease (B) Lipase
(C) Ligase (D) Peroxidase
(E) Answer not known

106. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:
கூற்று (A): பூச்சுண்ணும் தாவரம் பூச்சிகளின் உடலில் உள்ள புரோட்டீன்களை செரிக்கின்றன.
காரணம் (R) : பூச்சுண்ணும் தாவரம் நைட்ரஜன் பற்றாக்குறை உள்ள மண்ணிலும் வளரும்.
(A) (A) சரி ஆனால் (R) (A)-விற்கு சரியான விளக்கமல்ல
(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கம்
(C) (A) சரி ஆனால் (R) தவறு
(D) (A) மற்றும் (R) இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை
Consider the following statements:
Assertion (A): Insectivorous plants digest proteins of insert body.
Reason (R): Insectivorous plants grown in nitrogen ($N_2$) deficient soil.
(A) (A) is true but (R) does not explains (A)
(B) Both (A) and (R) are true, (R) explain (A)
(C) (A) is true but (R) is false
(D) Both (A) and (R) are false
(E) Answer not known

107. உலக தொழுநோய் தினம்?
(A) ஜனவரி - 28 (B) ஜனவரி - 30
(C) பிப்ரவரி - 26 (D) மார்ச் - 30
(E) விடை தெரியவில்லை
World leprosy day observed on?
(A) January - 28 (B) January - 30
(C) February - 26 (D) March - 30
(E) Answer Not Known

108. 2021-ஆம் ஆண்டிற்கான ஒரு சிறந்தப் பெண் ஊடகவியலாளருக்கான "சாமோலி தேபி ஜெயின் விருது" யாருக்கு வழங்கப்பட்டது?

(A) ரோஹினி மோகன்
(B) நீது சிங்
(C) ஆரிஃபா ஜோஹாரி
(D) பிரியங்கா துபே
(E) விடை தெரியவில்லை

Who was awarded the "Chameli Devi Jain Award" for an outstanding Woman media person(2021)?
(A) Rohini Mohan
(B) Neetu Singh
(C) Aarcba Johari
(D) Priyanka Dubey
(E) Answer Not Known

109. நாட்டிலேயே அதிக தீ விபத்து ஏற்படும் மாநிலங்கள் பட்டியலில் தமிழகத்தின் இடம் என்ன?
(A) 3வது இடம்
(B) 8வது இடம்
(C) 4வது இடம்
(D) 5வது இடம்
(E) விடை தெரியவில்லை

In which place got Tamilnadu in one of the most fire prone state in the country?
(A) 3rd Palce
(B) 8rd Palce
(C) 4rd Palce
(D) 5rd Palce
(E) Answer Not Known

110. ICC மகளிர் உலகக்கோப்பைப் போட்டியில் வெற்றிப்பெற்ற அணி (2022)?
(A) இங்கிலாந்து
(B) ஆஸ்திரேலியா
(C) நியூசிலாந்து
(D) இந்தியா
(E) விடை தெரியவில்லை

Who won the match ICC Women's worldcup 2022?
(A) England
(B) Australia
(C) Newzealand
(D) India
(E) Answer Not Known

111. சமீபத்தில் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட GI சான்றளிக்கப்பட்ட ஜர்தாலு மாம்பழங்களை எந்த இந்திய மாநிலம் உற்பத்தி செய்கிறது?
(A) மகாராஷ்டிரா
(B) தமிழ்நாடு
(C) பீகார்
(D) ஆந்திர பிரதேசம்
(E) விடை தெரியவில்லை

Which Indian state produces GI certified Jardalu mangoes, which were recently exported to the UK?
(A) Maharashtra
(B) Tamil Nadu
(C) Bihar
(D) Andhra Pradesh
(E) Answer Not Known

112. ........... மாவட்டம் வெடி பொருட்களை ஏற்றுமதி செய்கிறது.
(A) வேலூர்
(B) விருதுநகர்
(C) விழுப்புரம்
(D) சிவகங்கை
(E) விடை தெரியவில்லை

......... district exports crackers.

(A) Vellore
(B) Virudhunagar
(C) Villupuram
(D) Sivagangai
(E) Answer not known

113. ......... ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது.
(A) ஏற்றுமதி
(B) இறக்குமதி
(C) வாணிபம்
(D) போக்குவரத்து
(E) விடை தெரியவில்லை
........... decides the economic growth of a country.
(A) Export
(B) Import
(C) Trade
(D) Transport
(E) Answer not known

114. செங்குத்தான சரிவும் அடர்ந்த காடுகளும் கொண்ட மலைப்பிரதேசம் ............ மக்கள் தொகையை அதிகரிக்கின்றது.
(A) நடுத்தரம்
(B) அதிகம்
(C) குறைந்த
(D) மிகக்குறைந்த
(E) விடை தெரியவில்லை
Mountainuous regions with steep slopes and forest covers supports .............. population.
(A) medium
(B) more
(C) small
(D) very low
(E) Answer not known

115. சரியான விடையைத் தேர்ந்தெடு.
i. தமிழ்நாட்டில் பிறர் செய்யப்படும் பரப்பளவில் பாசன வசதி பெற்ற நிலத்தின் பரப்பளவு 57% ஆகும்.
ii. தென் இந்தியாவின் ஐந்தாவது பெரிய ஆறு காவேரி.
iii. காவேரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டில் மேட்டூர் அணை மற்றும் கல்லணை கட்டப்பட்டுள்ளது.
iv. தமிழ்நாட்டின் மொத்த புவியியல் பரப்பு 1,30,058 கி.மீ.$^2$ ஆகும்.
(A) i, iii, iv
(B) i, iv
(C) i, iii
(D) அனைத்தும்
(E) விடை தெரியவில்லை
Choose the correct statement.
i. Irrigated land surface out of cultivable land is 57% in Tamil Nadu.
ii. River Cauvery is the 5th largest river in South India.
iii. The dams constructed across Cauvery in TN are Mettur dam and Kallanai.
iv. The total geographical area of TN is 1,30,058 km$^2$
(A) i, iii, iv
(B) i, iv
(C) i, iii
(D) all the above
(E) Answer not known

116. மனிதவளம் மேம்பாட்டு குறியீடு கணக்கில் பின்வரும் எந்தப் பரிமாணத்தை எடுத்துக் கொள்ளவில்லை?

(A) பாலினம் (B) உடல்நலம்

(C) கல்வி (D) வருமானம்

(E) விடை தெரியவில்லை

The Human Development Index does not take into account the following dimension in its calculation.

(A) Gender (B) Health

(C) Education (D) Income

(E) Answer not known

117. வெளிகுடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்டம்

(A) இராமநாதபுரம் (B) கோயம்புத்தூர்

(C) சென்னை (D) வேலூர்

(E) விடை தெரியவில்லை

......... has recorded the maximum number of emigrants.

(A) Ramanathapuram (B) Coimbatore

(C) Chennai (D) Vellore

(E) Answer not known

118. இரண்டு எண்களின் மீ.பெ.வ மற்றும் மீ.சி.ம முறையே 11, 693 அவற்றுள் ஒரு எண் 77 எனில் மற்றொரு எண் எது?

(A) 99 (B) 15

(C) 87 (D) 93

(E) விடை தெரியவில்லை

The HCF of two Numbers is 11 and their LCM is 693. If one of the number is 77, Find the other

(A) 99 (B) 15

(C) 87 (D) 93

(E) Answer not known

119. பின்வரும் கூட்டுத்தொடர் வரிசை $-1, -\frac{5}{6}, -\frac{2}{3}, \ldots \frac{10}{3}$ எனில் மொத்த உறுப்புகளின் எண்ணிக்கை

(A) 25 (B) 27

(C) 23 (D) 21

(E) விடை தெரியவில்லை

The following AP is $-1, -\frac{5}{6}, -\frac{2}{3}, \ldots \frac{10}{3}$ then the total number of term is

(A) 25 (B) 27

(C) 23 (D) 21

(E) Answer not known

120. 198, 202, 211, 227, .... என்ற தொடரில் அடுத்த உறுப்பைக் காண்க

(A) 210 (B) 212

(C) 252 (D) 27

(E) விடை தெரியவில்லை

Find the next term in the series : 198, 202, 211, 227, ....

(A) 210 (B) 212

(C) 252 (D) 27

(E) Answer not known

121. இரு எண்களின் விகிதம் 1; 2 இவ்விரு எண்களுடன் 7-ஐ கூட்டினால் விகிதமானது 3; 5 என மாறுகிறது எனில் இதன் மிகப்பெரிய எண்

(A) 17 (B) 12

(C) 28 (D) 36

(E) விடை தெரியவில்லை

Two numbers are in the ratio 1: 2 . If 7 is added to both their ratio changes to 3:5 then the greatest number is

(A) 17 (B) 12

(C) 28 (D) 36

(E) Answer not known

122. தாரணியின் வயது, ராணியின் வயதிலிருந்து 3 குறைவு. ராணியின் வயது 18. எனில் ராணி மற்றும் தாரணியின் வயது விகிதம் யாது?

(A) 5:6 (B) 6:5

(C) 3:6 (D) 6:3

(E) விடை தெரியவில்லை

Tharani's age is 3 less than that of Rani. If Rani's age is 18. What are the ratio of Rani and Tharani's age?

(A) 5:6 (B) 6:5

(C) 3:6 (D) 6:3

(E) Answer not known

123. ரூ. 8,000க்கு 10% வட்டிவீதம் எனில் இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் கூட்டு வட்டிக்கும் தனி வட்டிக்கும் உள்ள வித்தியாசம் காண்க.

(A) ரூ.800 (B) ரூ.80

(C) ரூ.80,000 (D) ரூ. 10,000

(E) விடை தெரியவில்லை

Find the difference between Simple Interest and Compound Interest for a sum of Rs. 8,000 at 10%p.a. in 2 years.

(A) Rs.800 (B) Rs.80

(C) Rs. 80,000 (D) Rs. 10,000

(E) Answer not known

124. ஒரு முக்கோணத்தின் கோணங்கள் 1:3:5 என்ற விகிதத்தில் உள்ளன எனில் அக்கோணங்களின் மதிப்புகள் முறையே

(A) $20^0, 100^0, 60^0$ (B) $20^0, 60^0, 100^0$
(C) $30^0, 60^0, 90^0$ (D) $60^0, 30^0, 90^0$
(E) விடை தெரியவில்லை

If the angles of a triangle are in the ration 1:3:5 Then the angles are
(A) $20^0, 100^0, 60^0$ (B) $20^0, 60^0, 100^0$
(C) $30^0, 60^0, 90^0$ (D) $60^0, 30^0, 90^0$
(E) Answer not known

125. மூன்று எண்கள் 3 : 5: 7 என்ற விகிதத்தில் உள்ளன. அவற்றின் சராசரி 60 எனில், அவ்வெண்களில் மிகச்சிறிய எண் யாது?
(A) 36 (B) 12
(C) 15 (D) 48
(E) விடை தெரியவில்லை

Three numbers are in the ratio 3 : 5 : 7 and their average is 60. Find the smallest number?
(A) 36 (B) 12
(C) 15 (D) 48
(E) Answer not known

126. 2A = 3B =4C எனில் A:B: C- ன் விகிதம்
(A) 1:2:3 (B) 2: 3:4
(C) 6: 4: 3 (D) 4:5:2
(E) விடை தெரியவில்லை

If 2A = 3B =4C then A:B: C is
(A) 1:2:3 (B) 2: 3:4
(C) 6: 4: 3 (D) 4:5:2
(E) Answer not known

127. மீ.சிம. காண்? $2^3 \times 3^2 \times 5 \times 11, 2^4 \times 3^4 \times 5^2 \times 7, 2^5 \times 3^3 \times 5^3 \times 7^2 \times 11$
(A) $2^5 \times 3^4 \times 5^3$ (B) $2^5 \times 3^4 \times 5^3 \times 7^2 \times 11$
(C) $2^3 \times 3^2 \times 5 \times 7 \times 11$ (D) $2^3 \times 3^2 \times 5$
(E) விடை தெரியவில்லை

The LCM of $2^3 \times 3^2 \times 5 \times 11, 2^4 \times 3^4 \times 5^2 \times 7, 2^5 \times 3^3 \times 5^3 \times 7^2 \times 11$
(A) $2^5 \times 3^4 \times 5^3$ (B) $2^5 \times 3^4 \times 5^3 \times 7^2 \times 11$
(C) $2^3 \times 3^2 \times 5 \times 7 \times 11$ (D) $2^3 \times 3^2 \times 5$
(E) Answer not known

128. ? குறியிட்ட இடத்தில் வரும் எண்ணைக் காண்க




(A) 18 (B) 19

(C) 20 (D) 21

(E) விடை தெரியவில்லை

Find the missing number in the place?




(A) 18 (B) 19

(C) 20 (D) 21

(E) Answer not known

129. 15 தொழிலாளர்களுக்கு 6 நாட்களுக்கான கூலி ரூ.7,200 எனில் 23 தொழிலாளர்களுக்கு 5 நாட்களுக்கான கூலி எவ்வளவு?

(A) ரூ.6,200 (B) ரூ.7,200

(C) ரூ.8,200 (D) ரூ. 9,200

(E) விடை தெரியவில்லை

If the wages of 15 labourers 6 days are Rs. 7,200, find the wages of 23 labourers for 5 days

(A) Rs. 6,200 (B) Rs.7,200

(C) Rs. 8,200 (D) Rs. 9,200

(E) Answer not known

130. 48 மீ ஆரமாகக் கொண்ட வட்ட வடிவப் பூங்காவின் வெளிப்புறத்தில் 4 மீ அகலத்தில் சமச்சீரான வட்டப்பாதை அமைக்கப்படுகிறது. அப்பாதையின் பரப்பை காண்க.

(A) 1256மீ$^2$ (B) 1255மீ$^2$

(C) 400மீ$^2$ (D) 1254மீ$^2$

(E) விடை தெரியவில்லை

A uniform circular path of width 4 m is laid out around a circular park of radius 48 m. Find the area of the circular path.

(A) 1256 m$^2$ (B) 1255 m$^2$

(C) 400 m$^2$ (D) 1254 m$^2$

(E) Answer not known

131. MILK எனும் ஆங்கில வார்த்தை NKPSஎனக் குறியீடு மாற்றம் செய்யப்பட்டால் POT எனும் ஆங்கில வார்த்தையின் குறியீடு மாற்றம் எது?

(A) QNS (B) QQX

(C) RQU (D) RSV

(E) விடை தெரியவில்லை

MILK is coded as NKPS then POT is coded as

(A) QNS (B) QQX

(C) RQU (D) RSV

(E) Answer not known

132. ஒரு தோட்டக்காரர் சரிவக வடிவில் சுவர் ஒன்றினை அமைக்க திட்டமிடுகிறார். சரிவகத்தின் நீண்ட முதல் வரிசைக்கு 100 செங்கற்கள் தேவைப்படுகிறது. பின்பு ஒவ்வொரு வரிசையின் இருபுறமும் 1 செங்கல் குறைவாக வைக்க வேண்டும். அவ்வடிவமைப்பில் 25 வரிசைகளிருப்பின் அவர் வாங்க வேண்டிய செங்கற்களின் எண்ணிக்கை எத்தனை?

(A) 1500 (B) 1700
(C) 1900 (D) 2000
(E) விடை தெரியவில்லை

A gardener plans to construct a trapezoidal shaped structure in his garden. The longer side of side of trapezoid needs to start with a row of 100 bricks. Each row must be decreased by 1 bricks on each end and the construction should stop at 25th row. How many bricks does he need to buy?

(A) 1500 (B) 1700
(C) 1900 (D) 2000
(E) Answer not known

133. 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தத் துறைக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டது?

(A) எரிசக்தித் துறை (B) சமூகத் துறை
(C) போக்குவரத்துத் துறை (D) தொலைதொடர்புத் துறை
(E) விடை தெரியவில்லை

Which sector got the highest allocation in the Twelfth Five-Year Plan?

(A) Energy (B) Social
(C) Transport (D) Communication
(E) Answer not known

134. பொதுத்துறை மற்றும் தனியார் கூட்டுப் பங்களிப்பால் இந்தியா அதிக அளவில் முதலீடுகள் பெற்றுள்ள ஒரே துறை

(A) சாலை போக்குவரத்து மற்றும் விமான நிலையங்கள் நவீனமாக்கல் துறை
(B) கல்வி மற்றும் மக்கள் நலத்துறை
(C) ரயில்வே துறை
(D) வங்கித் துறை
(E) விடை தெரியவில்லை

India's major recipient of investment in public, Private Partnership project is successful only in

(A) Road transport and modernisation of airports
(B) Health and education
(C) Railways
(D) Banking
(E) Answer not known

135. எந்தச் சமுதாயத்திலும் வறுமை ஒரு முக்கியச் சுட்டிக்காட்டி என்று கருதப்படுகிறது.

(A) பொருளாதார செல்வம் (B) பொருளாதாரப் பின்னடைவு
(C) பொருளாதாரத்தில் ஏழை (D) பொருளாதார வளர்ச்சி
(E) விடை தெரியவில்லை

Which is considered as an important indicator of poverty in any society?

(A) Economic Wealth
(B) Economic Backwardness
(C) Poor in Economic
(D) Economic Growth

136. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் சிலவற்றின் மீது வரி விதிக்கப்படுகின்றது. இது மைய அரசுக்குச் செல்கின்றது. அந்த வரி
(A) நேர்முக வரி
(B) மறைமுக வரி
(C) கலால் வரி
(D) சேவை வரி
(E) விடை தெரியவில்லை

Tax is charged on some items which are manufactured in the country. This is collected by the Government of India. This Tax is
(A) Direct Tax
(B) Indirect Tax
(C) Excise Duty
(D) Service Tax
(E) Answer not known

137. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக:

(a) நிதித்துறை சீர்திருத்தக் குழு — 1. S.D. டெண்டுல்கர்
(b) நிதி உள்ளடக்கக் குழு — 2. ரகுராம் ராஜன்
(c) நேரடி வரிகள் விசாரணைக் குழு — 3. சி. ரங்கராஜன்
(d) வறுமை மதிப்பீட்டு முறை — 4. வாஞ்சூ

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

Match the following:

(a) Committee on Financial sector Reforms — 1. S.D. Tendulkar
(b) Committee on Financial Inclusion — 2. Raghuram Rajan
(c) Direct Taxes Enquiry Committee — 3. C. Rangarajan
(d) Methodology for Estimation of Poverty — 4. Wanchoo

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) Answer not known

138. ஊழலால் உருவாவது
(A) சிதைவுகள்
(B) செயல்திறனற்ற நிலை
(C) ஒப்பந்தங்களை மீறும் சிரமம்
(D) மேற்கண்டயாவும்
(E) விடை தெரியவில்லை

Corruption generates

(A) distortions
(B) inefficiency
